**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**SC.No.68/2024 - PW- 7**

| | |
|---|---|
| Name | திரு. மகேந்திரன் |
| Husband/Father Name | மாசிலாமணி |
| Village /Area | மகேந்திரவாடி |
| Taluk | நெமிலி |
| Occupation | விவசாயம் |
| Age | 45 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 18.11.2025.

**(எதிரிகள் 2 முதல் 5 வரை ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்த சக்திவேல் என்பவர் என்னுடைய சித்தப்பா மகன் ஆவார். அசா.1 என்னுடைய மைத்துனர் ஆவார். கடந்த 17.12.2021 அன்று சக்திவேல் JCB வண்டியை இரவு 09.00 மணிக்கு எடுத்துக்கொண்டு சிறுவளையம் கிராமத்திற்கு சென்றார். அப்போது சிறுவளையத்தில் உள்ள கேசவன் என்பவரது வீட்டின் சுவர் மீது இடித்து வண்டி நின்றது. அப்போது மகேந்திரவாடி கிராமத்தை சேர்ந்த அருள், அருளின் மகன் மற்றும் அவரது உறவினர்கள் கொம்பாலும், கத்தியாலும், கல்லாலும் சக்திவேலை அடித்ததாக கேள்விப்பட்டேன்.

பிறகு காயம் பட்ட சக்திவேலை ஆம்புலன் மூலமாக எனது மைத்துனர் செந்தில்குமார் வேலூர் அடுக்கம்பாறை மருத்துவனைக்கு அழைத்து சென்றார். மறுநாள் காலையில் சக்திவேல் இறந்ததாக கூறினார்கள். இது சம்பந்தமாக பானாவரம் காவல் ஆய்வாளர் என்னை

விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சம்பவத்தின் போதும் நான் விவசாயம் வேலை தான் செய்து வந்தேன். சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. சத்திவேலின் பிணத்தை அடக்கம் செய்து 3 – 4 நாட்கள் கழித்து தான் போலீசார் என்னை விசாரித்தார்கள் என்று சொன்னால் சரிதான். இறந்த சக்திவேல் எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.11.18 17:05:16 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.